அசல்

(169) 23.7.26. R. வேங்கடாசலம்.

அசல் -1 நகல் -1

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

இதழாசிரியர்,
தமிழ்ப் பொழில்.

கருந்திட்டைக்குடி,
தஞ்சை, 23.7.26

5/1/40

திருவுளத்துக்குகந்த தலைப்பயனுடைய பெரியீர், பலப்பல வணக்கம். நலம். நலம் அறிவிக்க வேண்டுகின்றேன்.

தாங்கள் அடிக்கடி கூறிவந்த ஏட்டுச் சுவடிகளை வாங்கி, பெற்றும் கையெழுத்துப் படிகளையும், ஏனையவற்றை ஒப்புநோக்கியும், இயன்ற வரையெல்லாம் புரிந்து வேலை செய்து வருகின்றேன்; இன்னும் அவைகளைப் பெருக்கிக் கொள்ள இயலாது வருந்துகின்றேன். இவ்வாறு சில ஐயங்கள். அவை. (1) நான் எதிர்பார்த்த திருவிளையாடற் சுவாமிகள் என்பார் வருவதாக, ஏனையோர் அறிவித்த கடிதங்கள் வரவில்லை. (2) அவர் சொன்ன அச்சுவடிகளுள் (ஏனைய) பகுதியின் நிலைமையைப் பற்றி, இன்னும் உங்களுக்குப் பெரியவர் சொல்லியது. இன்

அசல்

(109)

23.7.26. R. வெங்கடாசலம்.

அசல் - 1 நகல் - 1

போன்று நிலவும் உள. [illegible]
காலை 7 மணியிலிருந்து 9½ மணி வரையிலும்
மாலையில் 3லிருந்து 4 மணி வரையிலும்
இப்படியாக படித்து வருகின்றேன். கனி,
[illegible] போன்று [illegible] பயன்
பெறவில்லை. இவ்வாறு [illegible]
இருக்கின்றது. என் [illegible] யுக்தியை.

உடல், பொருள் எல்லாம் அர்ப்பணித்து
நீங்கள் [illegible] புதுமை
[illegible] உண்டாக்குவீர்கள்
என்று நம்புகின்றேன். எவ்வாறு
[illegible]
[illegible] அவ்வாறு [illegible]
[illegible]
என் மனத்தில் [illegible]
[illegible]
[illegible] கொள்ள [illegible]
[illegible] கொள்ளுகின்றேன்.

இன்று, தங்கள் அனுப்பிய பத்திரிகையில்
[illegible]
[illegible]. பல பத்திரிகைகள் [illegible]
[illegible]. (தங்கள் [illegible]
[illegible] வெளியிட்ட

அசல்

(109) 23.7.26. R. வேங்கடசாமி.

அசல் – 1 நகல் – 1

2

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

இதழாசிரியர்,
தமிழ்ப் பொழில்.

கருந்திட்டைக்குடி,
தஞ்சை, ____________

சில பத்திகளில் உயிரற்ற உடலையே காணலாகும்.) வேறுபாடுகள் எல்லாவற்றையும் விளக்கமாக எழுதிவருகின்றேன்.

'தெய்வச் சிலையார் எழுதின வாழ்த்து' யெனக் காணலாகின்றதே. எழுதினன் என்ற சொல் - இயற்றின என்னும் பொருளில் வருவது வழக்கேதானோ? பகுதி செய்தி என்ற பொருளில் வருகின்றதோ? இவை கூடி அறிஞர் கூர்ந்து ஆராய்க்க வேண்டுகின்றேன்.

தெய்வச் சிலையார் வரலாறுகள் எழுதியருளின், அவற்றைப் பொன்னேபோற் போற்றி முன்னோர்த் தங்கள் அருளிச் செயலாக வெளியிடுவேன்.

இச்சங்கத்தில் வைத்துக் கொள்ளத் தங்கள் உருவப்படம் ஒன்று இன்றி யமையாதிருக்கின்றது. அதனைச் செய்க. செலவு இறுப்பின் அனுப்புவோம். யாயான்.

வணக்கம் பல.

அடியேன்
R. வேங்கடசாமி

அசல்

109

23.7.26. R. வெங்கடாசலம்.

அசல் -1 நகல் -1

[illegible]

84

நகல்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

இதழாசிரியர்,
தமிழ்ப் பொழில்.

கருந்திட்டைக்குடி,
தஞ்சை, 23-7-26.

தமிழுலகத்துத் தவப்பயனாகிய பெரியீர். பலப்பல வணக்கம். நலம். நலம் அறிவிக்க வேண்டுகிறேன்.

தாங்கள் அருள் கூர்ந்து அளித்த ஏட்டுச் சுவடியை வைத்து முற்றும் சிதைந்த இடங்களைப் புதுக்கியும் ஏனையவற்றை ஒப்பு நோக்கியும், இயன்ற விரைவெல்லாம் புரிந்து வேலை செய்து வரினும், குறித்த அளவைக்குள் முடித்துக் கொள்ள இயலாதவன் ஆகியுள்ளேன். இடையூறுகளும் சில எய்தின. அவை (1) நான் எதிர்பார்த்த திரு. நீலகண்ட சுவாமிகள் என்பார் வருதற்கியலாதவராக ஏனையொரு தமிழறிஞரைக் காணச் சிலநாட்கள் கழிந்தன. (2) அடியேன் சொந்த அலுவல்களுள் மிக இன்றியமையாத சிலபற்றி இரண்டு நாள் (சனி, ஞாயிறு) என் ஊருக்குப் போய்வர நேர்ந்தது. இவை போன்ற வேறு சிலவும் உள.

காலை 7 மணி முதல் 9½ மணி வரையிலும் மாலையில் ஏறத்தாழ 4 மணி நேரங்களும் இடையறாது படித்து வருகின்றோம். சனி, ஞாயிறு போன்ற முழு ஓய்வு நாள்கள் இதுகாறும் பயன்பெறவில்லை. இவ்வாரத்திலும் இயலாததாகின்றது. என்செய்வேம். நூலாராய்ச்சியில் உடல் பொருளையெல்லாம் அளித்திருக்கும் தங்கட்குச் சிறியேங்கள் புதுமுயற்சியால் ஆகிய தாழ்வுகள் உடன்பாட்டினைத் தருமென எண்ணுகின்றேன். எவ்வளவு விரைவில் முடித்துக் கொள்ள இயலுமோ அவ்வளவு விரைவையும் மேற்கொள்வதிற் சிறிதும் அயரேம் என்பதொன்றை உறுதியாக விண்ணப்பித்து இன்னும் சிலநாள் பிரதிய

நகல்

வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப் பன்முறை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இனி, தாங்கள் அளித்த பிரதியில் சில சூத்திர உரைகளை முற்றும் வேறாகக் காணப் பெறுகின்றன. பல பகுதிகள் முற்றும் வேறுபடுகின்றன. (தங்கள் பிரதி எய்தியிராவிடின் இங்குள்ள வெளியீடு சில பகுதிகளில் உயிரற்ற உடலெனவே காணலாகும்). வேறுபாடுகள் எல்லாவற்றையும் விளக்கமாக எழுதி வருகின்றேன்.

'தெய்வச்சிலையார் <u>எழுதின</u> விருத்தி'யெனக் காணலாகின்றதே. <u>எழுதின</u> என்ற சொல் <u>இயற்றின</u> என்னும் பொருளில் வருவது வழக்குத்தானோ? <u>பிரதி செய்த</u> என்ற பொருளில் வருவதின்றோ? இவைகட்கு அருள் கூர்ந்து விடையளிக்க வேண்டுகின்றேன்.

தெய்வச்சிலையார் வரலாறுகள் எழுதியருளின், அவற்றைப் பொன்னேபோற் போற்றி முன்னர்த் தங்கள் அருளிச் செயலாக வெளியிடுவேன்.

இச்சங்கத்தில் வைத்து வைக்கத் தங்கள் உருவப்படம் ஒன்று இன்றியமையாததாகின்றது. அருள் செய்க. செலவு குறிப்பின் அனுப்பி வைப்போம்

பிறகு.

வணக்கம் பல.

அடியேன்,

R. வேங்கடாசலம் பிள்ளை

நகல்

ந. வேங்கடாசலம் பார்வை
தமிழ்ப் பொழில்
23-7-26

இவரது கடிதம் தனியே பாலத்தின் கவரில் வைக்கப் பட்டுள்ளது.

நகல்

217

218

Copied

J.J. vol IV.
p. 215 - 217